பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 16] சென்னை : ஐப்பசி 10 (26—10—68) சனி ★ வெளியூர் : ஐப்பசி 11 (27—10—68) ஞாயிறு [இதழ் : 108

எத்தர்களை
விரட்டியடிக்க
உதயசூரியனை
ஆதரியுங்கள் !

கடைசி நேரம் -- கடமை மறவாதீர்!

காங்கிரசாரின் 'மனக்கோட்டை' தகர்ந்திடச் செய்வீர்!

விழிப்புடன் செயலாற்றி வீணர்களை முறியடிப்பீர்

அண்ணன் மனம் மகிழ வெற்றிகளைக் குவிப்பீர்!

சென்னை, அக். 26—

இன்றுவரை நாட்களை எண்ணிக்கொண்டிருந்தோம்; இனி எண்ணுவதற்கு நாள் இல்லை; மணிகளைத்தான் -- மணித்துளிகளைத்தான் எண்ணவேண்டும்!

நாளை பொழுது புலர்ந்தால் அக்டோபர் 27! நாம் அனைவரும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் மாநகராட்சிமன்றத் தேர்தலில் வாக்களிக்கும் திருநாள்!

நிலத்தைப் பண்படுத்தி -- நீர் பாய்ச்சி -- உரமிட்டு -- உழுது பரம்படித்து -- பயிரிட்டுக் களையெடுத்து -- கதிர் முற்றி அறுவடைச்குக் காத்திருக்கும் உழவனைப்போல் கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும் இன்று இருக்கிறோம்.

அறுவடைக்கு இன்னும் ஒரே இரவுதான் உள்ளது; இந்த நேரத்தில் வயலுக்குக் கட்டுக்காவல் இல்லையென்றால், பட்டபாட்டின் பலனை அனுபவிக்க முடியாமல் கோட்டை விட்டவர்களாகிவிடுவோம்!

மாநகராட்சித் தேர்தலுக்கான அறிவிப்பு வந்த நாளிலிருந்து இன்றுவரை, நமது தோழர்கள் பம்பரம்போல் சுழன்று ஆற்றிய பணிகள் -- மெய்வருத்தம் பாராது, பசிநோக்காது, கண்துஞ்சாமல் செய்த வேலைகள் அனைத்தும் பாழாகிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையுமாகும்.

'வேலைகளெல்லாம் முடிந்துவிட்டன; விடிந்தால் வாக்குச் சாவடிக்குப் போகலாம்' என்று எண்ணி ஓய்ந்திருந்துவிடக்கூடாது! ஓய்வும் உறக்கமும் நாளை மாலைவரை கூடாது!

கழகத் தோழனே! உன் செயல் திறனை -- பணியாற்றும் பாங்கினை -- இந்த நாடே புகழ்கிறது!

தூய்மையான தொண்டர்களைக் கொண்ட பாசறை தி. மு. கழகம் என்பதை, மாற்றுக் கட்சிக்காரர்களும் மனம்விட்டுக் கூறுகிறார்கள்! 'நம்மிடம் இப்படிப்பட்ட தொண்டர்கள் இல்லையே' என ஏங்குகிறார்கள்!

'தமது பண்புக்கேற்ற தம்பிமார்களை அண்ணா நிரப்பப் பெற்றிருக்கிறார்' என்று அவனியே கூறுகிறது!

'கடமை -- கண்ணியம் -- கட்டுப்பாடு என்ற கேடயத்தை ஏந்தி அண்ணா காட்டிய அறவழியில் செயல்பட்டுவரும் ஆற்றல் மறவர்கள் நாம்' என்று போற்றப்படுவது மட்டுமல்ல -- அந்தப் புகழுரைக்கு முற்றிலும் உரிமைபடைத்தவர்கள் என்பதையும் நிலைநாட்டிவிட்டிருக்கிறோம்!

நம்மையெல்லாம் ஆளாக்கி, வழிகாட்டி நடத்திச் செல்லும் அண்ணன் -- அந்த அறத்திருவுரு -- அருட்பேருரு இன்று நம்மிடையே இல்லை; அலை கடலுக்கு அப்பால் -- பதினோராயிரம் மைல்களைக் கடந்திருக்கும் அமெரிக்க நாட்டிலே இருந்துகொண்டிருக்கிறார்; என்றாலும், நம் ஒவ்வொருவரின் இதயத்திலும் அவர் குடிகொண்டிருக்கிறார்! நம் அனைவரையும் தம் இதயத்தில் 'சிறை' வைத்திருக்கக்கூடிய அளவுக்கு விரிந்த உள்ளம் அவருடையது!

'தப்பியுடையான் படைக்கு அஞ்சான்' என்று நம் அண்ணன் அடிக்கடிச் சொல்வதைக் கேட்டு, மகிழ்ச்சியால் பூரித்தவர்கள் நாம்!

'இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்' -- நம்மைக் காட்டி அவர் இப்படிக் கேட்டபோதெல்லாம், புளகாங்கிதம் அடைந்தவர்கள் நாம்!

தம்பிமார்களிடம் தாம் வைத்திருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையின் காரணமாகத்தான், பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்த போதிலும், உடல் நிலையையும் கருதாது, 'தெம்போடும் மகிழ்வோடும் திகழ்கின்றார்' என்ற தித்திக்கும் செய்தியினை நித்தம் நித்தம் கேட்டு இன்பத்தில் திளைக்கிறோம்!

அந்த இன்பச் செய்தி, நாம் ஆற்றுகின்ற பணிகளுக்கு மேலும் உற்சாகமளிக்கிறது! நாம் காட்டுகின்ற உற்சாகம், அவர் உடல் நலிவு நீக்கும் மாமருந்தாக அமைகிறது!

எனவே, நம் அண்ணன் நம் ஒவ்வொருவருடைய அருகிலேயே இருப்பதாக எண்ணிக் கொண்டு செயலாற்றிடவேண்டும்.

இன்னும் சில நாட்களில் நம் முன் காட்சியளிக்கவிருக்கின்ற அண்ணனுக்கு நாம் வெற்றிக் காணிக்கையைச் செலுத்திட வேண்டும்.

இன்னும் இருப்பது சில மணி நேரமேயாகும். கழகத் தொண்டனின் கடமைக்கு அறைகூவல் விடுக்கும் நேரமாகும் அது!

காங்கிரசுக் கட்சியினர் பேசிய நச்சுப் பேச்சுக்கும், அவர்கள் அவிழ்த்துவிட்ட புளுகு மூட்டைகளுக்கும், சாட்டிய பொய்க் குற்றச்சாட்டுகளுக்கும் இனி வாயால் பதிலளிக்க இயலாது -- செயல் ஒன்றினால் தான் முடியும்!

கடந்த ஒரு திங்களாக நம் கழக முன்னணித் தலைவர்களெல்லாம் --- கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களெல்லாம் வாக்காளப் பெருமக்களுக்குச் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லிவிட்டார்கள் -- தெளிவுபடுத்த வேண்டியதையெல்லாம் தெளிவுபடுத்திவிட்டார்கள்!

'அரசியல் தெளிவும், விழிப்புணர்ச்சியும் மிகக் கொண்டவர்கள்' என்ற பெயரைப் பெற்றவர்கள் மாநகர வாக்காளர்கள்; எனவே, இனி அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியது ஒன்றுமில்லை. அவர்களும், 'யாருக்கு வாக்களிக்க வேண்டும்' என்பதை எப்போதோ முடிவு செய்திருப்பார்கள்.

இனிக் கழகத் தோழர்கள் செய்ய வேண்டியதெல்லாம், மீண்டும் ஒருமுறை வீடு வீடாகச் சென்று, உதயசூரியனை நினைவுபடுத்தும் வகையிலும் -- இறுதி நேர வேண்டுகோள் விடுக்கும் வகையிலும் வாக்காளப் பெருமக்களைச் சந்திக்க வேண்டும்.

வாக்காளர் பட்டியலை மீண்டும் ஒரு முறை சரி பார்த்து, யார் யார் -- எந்தெந்தத் தெருக்களில் -- எந்தெந்தப் பணிகளைக் கவனிக்க வேண்டும் என்று பணிகளைப் பிரித்து வகுத்துக்கொண்டு கடமையாற்ற வேண்டும்.

விழிப்போடு இருங்கள்! விடியும் வரை பணிகளைக் கவனியுங்கள்! விடிந்ததும் --- எழுஞாயிறு எழும்போதே வாக்காளர்முன் காட்சியளியுங்கள்!

எங்கும் 'உதயசூரியன்' -- எவர் நெஞ்சிலும் 'உதயசூரியன்' -- ஆழப் பதித்திடும் வகையில் பணிவோடும் கனிவோடும், பண்போடும் அன்போடும் வேண்டிக்கொள்ளுங்கள்!

இதுவே இறுதி நேரப் பணி! இதுவே கடைசி நேரக் கடமை!

வாக்குப் பதிவு தொடங்கி முடியும் வரை, எந்தவித விரும்பத்தகாத செயலும் நிகழ இடமளித்துவிடாதீர்! எதிரிகள் இதனை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்! வெறுப்பூட்டும் நிகழ்ச்சிகளை உருவாக்குவர் -- வேண்டாத காரியங்களிலெல்லாம் ஈடுபடுவர்; எனினும், மனம் பதறாமல் -- ஓட்டுக்கள் சிதறாமல் இருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டும்!

ஒவ்வொரு வட்டத்திலும் -- 'வாக்குப் பதிவு செய்யாத வாக்காளர் எவருமே இல்லை' என்ற அளவுக்கு -- நூற்றுக்கு நூறுபேரும் வாக்கு அளிக்குமாறு செய்யவேண்டும்!

வாக்குச்சாவடிமுன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் வகையில் கூட்டமாக எவரும் நிற்கக்கூடாது! ஒவ்வொரு கழகத் தோழரும், பம்பரம் போல் சுழலவேண்டும் -- எறும்பெனச் சுறுசுறுப்புக் காட்ட வேண்டும்! எதிரிகளின் மனக் கோட்டையைத் தவிடுபொடியாக்க வேண்டும்!

இந்தப் பணிகளையெல்லாம் செவ்வனே செய்து முடித்துவிட்டால், நாளை மறுநாள், அறுவடையின் பலனைக் கண்டுகண்டு மகிழலாம்! கேட்டுக் கேட்டுக் களிக்கலாம் --- பேசிப் பேசிப் பூரிக்கலாம்!

அதோ -- மேற்றிசையில் செங்கதிரோன் மறைந்துகொண்டிருக்கும் காட்சி தெரிகிறது -- வெண்ணிலவுக்கு வருகை கூறிக்கொண்டிருக்கிறது மாலைப்போது!

மறைந்த ஞாயிறு எழுகின்ற கீழ்த்திசையிலேயே உன் கண்ணும் கருத்தும் இருக்கட்டும்! இடையில் விடிவெள்ளியையும் காணத் தவறாதே!

ஒளிக்கதிர் பாய்ச்சி எழுகின்ற எழுஞாயிற்றின் தகத்தகாய காட்சியில், உள்ளமும் உடலும, எண்ணமும் செயலும் ஒன்றுபட்டு இயங்கட்டும்! 'உன்னை வெல்வார் இந்த அவனியில் இல்லை' என்ற புகழை நிலைநாட்டுவாய்!

வாழ்க அண்ணா!
வேல்க கழகம்!

எங்கும் பரவுக
எழுஞாயிற்றின் ஒளி!



இடைக் காலத் தேர்தல்கள்

புதுடில்லி, அக். 26—

பஞ்சாபிலும், மேற்கு வங்கத்திலும் இடைக்காலத் தேர்தல்கள், பிப். 9-ம் நாள் நடைபெறும்.

உத்தரப்பிரதேசத்திலும், பீகாரிலும் பிப். 3, 5, 7, 9-ம் நாட்களில், இடைக்காலத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு நடைபெறும்.

இந்த நான்கு மாநிலங்களிலும் பிப். 10-ம் நாள் வாக்குகள் எண்ணத் துவங்கப்பட்டு மறுநாள் முடிவுறும்.

புளுகர்கள் பிரசாரத்தை முறியடிக்க
உதயசூரியனுக்கு
வாக்களியுங்கள்!

சனநாயக விரோதச் சக்தியை வீழ்த்தக்
கூட்டணி வேட்பாளரை
ஆதரிப்பீர்!

தாழ்ந்திருந்த நாடு தலைநிமிர்ந்தது எப்படி?

எல்லா வளங்கள் இருந்தும் நமக்கு ஏன் இந்த நிலை?

சொந்த அறிவால் சிந்திப்பதற்குத் தவறிவிட்டோம் நாம்!

கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, அக். 26—

" 'இவ்வளவுதான் எனக்குத் தெரியும்' என்று சொல்லுபவர்கள் நம் நாட்டில் இல்லை; 'எல்லாம் தெரியும்' என்பவர்கள்தான் அதிகம் இருக்கிறார்கள்; 'எல்லாம் தெரியும் என்கிறாயே -- தெரிந்ததைச் சொல்' என்றால், 'நெஞ்சுக்குள்ளே இருக்கிறது; வெளிவரமாட்டேன் என்கிறது' என்பார்கள்; 'சரி, அது போகட்டும்; இது எப்படி -- அதையாவது சொல்' என்றால், 'நினைவுக்கு வரமாட்டேன் என்கிறது' என்பார்கள்!

"எல்லாம் தெரியும் என்ற போலி கௌரவத்தால்தான் நாம் வீழ்ந்து கிடக்கிறோம்! இந்த நிலை மாறி, உலக நாடுகள் மதிக்கத்தக்க நாடாக -- பண்டைக் காலத்தில் நாம் மற்ற நாடுகளைவிட எப்படி உயர்ந்திருந்தோமோ அந்த நிலைக்கு மீண்டும் உயர -- பசி, பிணி, பகையற்ற சமுதாயத்தை உருவாக்க -- நாம் பாடுபடவேண்டும்; அதற்கு அறிவியல் மனப்பான்மையை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும்"

என்று, கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 'அங்கும் இங்கும்' என்ற நூலை வெளியிட்டு உரையாற்றுகையில் கருத்தறிவித்தார்.

தமிழக அரசின் கல்வித் துறை ஆலோசகர் திரு. என். டி. சுந்தரவடிவேல் அவர்கள், தமது இரஷ்யச் சுற்றுப்பயண அனுபவங்களை இந்த நூலில் எழுதியுள்ளார்.

நியூசெஞ்சுரி வெளியீட்டகத்தின் சார்பில் இந்நூல் வெளியீட்டு விழா, நியூ உட்லண்ட்ஸ் விடுதியில் நடைபெற்றது; எழுத்தாளர் அகிலன் தலைமை வகித்தார்.

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தமது உரையில் மேலும் கூறியதாவது :—

"23 கோடிப் பேர் வாழுகின்ற சோவியத் நாட்டில், '7 கோடியே 30 இலட்சம பேர் படிக்கிறார்கள்' என்று இந்நூலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நம் நாட்டில், 16 வயது வந்தாலே 'இதற்கு மேல் படிக்கவேண்டிய அவசியமில்லை' என்று சிலர் நின்றுவிடுகின்றனர்!

படித்தவர்களின் எண்ணிக்கையில் நமது மாநிலம் இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தில் இருக்கிறது; கேரளம் முதல் இடத்தில் இருக்கிறது.

நூற்றுக்கு 42 பேர்தான் நம் நாட்டில் படித்திருக்கின்றனர்; இவர்களில் ஆறும் வகுப்பிற்கு மேல் 22 பேர்தான் படித்திருக்கின்றனர்; சிலர், 'ஐந்தாம் வகுப்புக்கு மேல் படிப்பது எதற்கு' என்று கேட்டுவிட்டு வீட்டிலேயே இருக்கின்றனர்: சிலர், 'கைநாட்டுத்தான் போடத் தெரிகிறதே -- இதற்குமேல் படிப்பென்ன வேண்டியிருக்கிறது' என்கின்றனர்; இன்னும் சிலர், வறுமை காரணமாகவும், விரைவில் திருமணம் செய்துவிடுவதாலும், 6 பேர்தான் கல்லூரிக்குச் செல்கின்றனர்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் நம் நாடு படித்தவர்களின் எண்ணிக்கையில் இரண்டாவதாக இருக்குமானால், மற்ற மாநிலங்கள் எந்த நிலையில் இருக்குமென்பதை நீங்களே உணர்ந்துகொள்ளுங்கள்!

40 ஆண்டுகளாக மிகவும் வீழ்ந்து கிடந்த நாடு சோவியத் நாடு; எந்த ஊக்கம் -- எத்தகைய சூழ்நிலை அவர்களை இந்நிலைக்கு உயர்த்தியது?

800 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் மூலம் -- கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம் மூலம் பிரிட்டன் வளர்ந்து உயர்ந்தது!

ஆனால், 40 ஆண்டுகளுக்குமுன் ஐரோப்பாக் கண்டத்திலேயே, 'நோய் பிடித்த நாடு' என்று கருதப்பட்ட இரஷ்யா உயர்ந்தது எப்படி? அறிவியல் மனப்பான்மை -- அறிவியல் அணுகுமுறை அங்கு இருப்பதால்தான்!

நம் நாட்டில் அறிவியலும் உண்டு; வளமும் உண்டு; ஆட்களும் உண்டு; ஆனால் ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாமல் இருக்கிறது.

அறிவியலுக்கும் -- ஆளுக்கும் தொடர்பு இல்லை; தனித்தனியே இருக்கிறது; அதனால்தான் நாம் தாழ்ந்து கிடக்கிறோம்!

இரஷ்யாவில் ஒரு கார் டிரைவர் விஞ்ஞான நூலைப் படித்துச் சென்றதாகவும், 'அதை, நூல் நிலையத்தில் வாங்கினாயா' என்று இங்கிருந்துபோன காரணத்தால் சுந்தரவடிவேலு கேட்டதாகவும், 'இல்லை இல்லை; நானே காசு கொடுத்து வாங்கினேன்' என்று அவன் சொன்னதாகவும் இந்நூலில் எழுதியிருக்கிறார்.

அந்த அளவுக்குச் சோவியத் இரஷ்யாவில் அறிவியல் மனப்பான்மை வளர்ந்து வருகிறது.

அறிவியல் மனப்பான்மை அதிகம் இருப்பதால்தான், விண்வெளிக் கப்பல் விடுகின்ற அளவுக்கு உயர்ந்திருக்கின்றனர்!

நம் நாட்டில் நமக்கு நாம் சிந்திப்பதே கொஞ்சம் கடினமாக இருக்கிறது.

நான் சிந்திப்பதற்குப் பதிலாக, 'நீயே சிந்தித்துச் சொல்லேன்; நான் அதை வெளியில் சொல்கிறேன்' என்போர் பலர் இங்கு உண்டு.

முன்னோரிடமிருந்து வாங்கிய தண்ணீர்தான் நம்மிடம் இருக்கிறதே தவிர, நாமாகத் தோண்டிய ஊற்றுத் தண்ணீர் இல்லை!

அதனால்தான் கற்பனை வளம் நம்நாட்டில் குறைந்திருக்கிறது!

கல்வியைப் பின்னணியாக வைப்பதால் இரஷ்யா முன்னேறுகிறது.

மாஸ்கோவிலுள்ள லெனின் நூலகம்தான் நூலகங்களிலேயே தலையாய நூலகம் என்று போற்றப்படுகிறது; அடுத்தது, இலண்டன் நூலகம் என்பார்கள்.

மாஸ்கோ நூலகத்தில் 160 மொழிகளிலே நூல்கள் இருப்பதாகவும், அங்குள்ளவர்கள் அதற்கான பட்டியலைக் காட்டியதாகவும் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார் -- திரு. சுந்தரவடிவேலு.

இரஷ்யாவிலுள்ள இயற்கைச் செல்வங்களையெல்லாம் செயற்கைச் செல்வங்களாக்கி அதை மனித சமுதாயத்திற்குப் பயன்படச் செய்து--பசி, பிணி, பகை அகற்றி இரஷ்யா உயர்ந்த நாடாக--உலக நாடுகளிடையே உல்லாசப் பூங்காவாகத் திகழ்கிறது!

நாமும் அதுபோல பசி, பிணி, பகையற்ற சமுதாயத்தை உருவாக்க முனைவோம்---முயற்சிப்போம்!"

'கன்னக்கோலர்' கைவரிசை இனிப் பலிக்காது

காட்டிக்கொடுப்பதற்கு இயந்திரம் வந்துவிட்டது!

ஒரு வீட்டில் கன்னம் வைக்க முயற்சி நடந்தால் போலீசு நிலையத்தில் எச்சரிக்கை ஒலி எழுப்பி காட்டிக்கொடுக்கும் கருவி ஒன்று உள்ளது.

ஒரு பிரிட்டிஷ் நிறுவனத்தின் நவீன தயாரிப்பான இந்த இயந்திரம், திருடர்களை விரட்டிப் பிடிக்க உதவும் வேட்டைக்காரன் -- செல்வர்களுக்கோ ஒரு சிறந்த காவல்காரன்!

வீட்டின் பாதுகாப்பான அறையில் இந்த இயந்திரத்தைப் பொருத்திவிட வேண்டும்; அந்த அறையில் வெளியிலிருந்து கன்னம் வைக்க எந்த முயற்சி நடைபெற்றாலும் உடனே இந்த இயந்திரம் இயங்கத் தொடங்குகிறது; அதாவது, கடப்பாறை போன்ற எந்த ஆயுதம் கொண்டு சுவரைத் தாக்கினாலும் உடனே இந்த இயந்திரம் 'விழித்துக்கொண்டு' இயங்க ஆரம்பிக்கிறது!

இதனோடு இணைந்து இயங்கும் பிறிதொரு கருவி, அருகில் உள்ள காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கும். இந்த அறையில் உள்ள கருவி இயங்கத் தொடங்கியவுடனேயே, போலீசு நிலையத்தில் உள்ள மற்றொரு பகுதியும் இயங்கத் தொடங்குகிறது. இதன் இயக்கம், மணி ஓசை எழுப்புவது தான்!

மணி ஓசை எழுப்பும் கருவியிலிருந்து இதன் மறுபகுதி எந்த இடத்தில் பொருத்தப்பட்டிருக்கிறது என்பதைக் கண்டுபிடித்துக் கொண்டு நேரே அங்கே விரைகிறார்கள் போலீசார்!

இந்திய சிகரெட்டுக்கு நேபாளத்தில் தடை

காட்மண்டு, அக். 24—

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட எல்லா வகை சிகரெட்டுகளின் விற்பனையையும், விநியோகத்தையும், நவம்பர் 15 முதல் நேபாளத்தில் தடை செய்ய நேபாள அரசு முடிவு செய்தது.

இரஷ்ய உதவியுடன் நிறுவப்பட்டுள்ள நேபாள சிகரெட்டுத் தொழிற்சாலைக்குப் பாதுகாப்பளிப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

ஆனால், ஆங்கில -- அமெரிக்க -- பாகிஸ்தான் சிகரெட்டுகள் பற்றிய தன்னுடைய முடிவை நேப்பாளம் இதுவரையில் அறிவிக்கவில்லை.

அரசியல் சட்டத்தில் உண்மை பலியிடப்படுகிறது!

முதலாளிகளின் விருப்பப்படித் தொழிற்சாலைகளை மூடுவதா?

அடிப்படை உரிமைகளைப் பயன்படுத்துவது பற்றி அமைச்சர் செ. மாதவன் கருத்துரை

சென்னை, அக். 26—

"அரசியல் சட்டம், நமது அடிப்படைச் சட்டமாகும்; ஆனால் அதுவே நமது இலட்சியம் அல்ல. 'சமூக நீதி' என்ற இலட்சியத்தை அடைவதற்கான வழியே அரசியல் சட்டம்; இதை மறந்தால், சமூக நீதியை ஈடேற்ற மக்கள், அரசியல் சட்டத்திற்கு அப்பாற்பட்ட வழிகளைப் பின்பற்றக்கூடும். 'அடிப்படை உரிமைகள்' என்பதன் பெயரால் பிற்போக்குவாதிகளின் நலன்களைப் பாதுகாக்கும் ஆர்வத்திலும் இந்தப் பிரச்சினையை மறந்துவிடுகிறார்கள்!'

என்று, சட்ட அமைச்சர் திரு. மாதவன், சென்னையில் நடந்த மனித உரிமைகள் பற்றிய கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"'அடிப்படை உரிமை' என்பதன் பேரால் தங்கள் விருப்பப்படி தொழிற்சாலைகளை மூடி தொழிலாளர்களுக்குத் துன்பத்தை இழைக்க முதலாளிகளை அனுமதிப்பது சரியா?" என்றும் அவர் கேட்டார்.

"இவ்வித நிலைமை சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்டால் நாட்டில் குழப்பம்தான் ஏற்படும்" என்று சுட்டிக்காட்டினார். அவர் மேலும் பேசியதாவது :—

"நமது நாட்டில் தலைசிறந்த நீதிபதிகளைக்கொண்டு நீதிமன்றங்கள் சுயேச்சையான முறையில் இயங்குகின்றன என்பது பெருமைக்குரியதாகும்.

நிர்வாகத்தின் உயர் மட்டத்தில் உள்ள நாங்கள், சமுதாய நலனுக்காகத் திட்டங்களை நிறைவேற்றுவதில் அக்கறை கொண்டிருக்கிறோம். மக்களின் தேவைகளுக்கு ஏற்ப இந்தக் கொள்கைகள் மாறிக்கொண்டே இருக்கின்றன.

நீதிமன்றங்களில் வழக்குகள் போட்டு அவை மூலமாக நாங்கள் எங்கள் கொள்கைகளை நிறைவேற்றுதபடி தடுக்கப்பட்டால், மக்கள் வேறு வகை ஆட்சி முறையை ஏற்படுத்த முயற்சிப்பார்கள்.

நமது அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை, நம் நாட்டின் நீதிமன்றங்கள் போற்றிப் பாதுகாக்கின்றன.

அடிப்படை உரிமைகள் என்றால் என்ன? -- அரசுக்கு எதிராகவோ, அல்லது சமுதாயத்திற்கு எதிராகவோ தனி மனிதனுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகள்தான் அடிப்படை உரிமைகள் என்று சாதாரணமாக மக்கள் கருதுகிறார்கள்!

அடிப்படை உரிமையானது, மக்களுக்கு மட்டுமே அளிக்கப்பட்டுள்ள உரிமை என்றும், இதில் அரசுக்கோ, சமுதாயத்திற்கோ சம்பந்தம் இல்லை என்றும் சாதாரணமாகக் கருதப்படுகிறது; ஆனால் அரசும் மக்களின் நலனுக்காகவே இருக்கிறது என்பதை நம்மில் பலர் மறந்துவிடுகிறோம்.

அரசியல் சட்டத்தில் உறுதி அளிக்கப்பட்டுள்ள பேச்சுரிமை அவசியமானதாகும். இந்த உரிமை அனுமதிக்கப்படாவிட்டால், எந்தத் தனி மனிதனும் தனது கருத்துக்களை வெளியிட முடியாது. அந்த அளவுக்கு அவனுடைய பணியைச் சமுதாயம் இழக்க நேரிடும்.

பேச்சுரிமை மறுக்கப்பட்டால் சனநாயகம் நிலைக்க முடியாது; ஆட்சி மாற்றம் சமாதான முறையில் நடைபெற முடியாது.

ஆகவே, பேச்சுரிமையானது சமுதாயத்திற்கு எதிராக மக்கள் பயன்படுத்தும் உரிமை அல்ல; ஆனால், சமுதாயம், அதன் சொந்த நலனுக்காகவே மக்களுக்கு அனுமதிக்கும் உரிமையாகும்.

இந்த உரிமையின் முக்கியத்துவத்தை உணராமல், அரசியல்வாதிகளான நாங்கள் எளிதில் விளம்பரம் பெறுவதற்காக ஒருவரையொருவர் திட்டிப் பேசுகிறோம்.

நாம் உணருகின்ற உண்மையைப்பேச நம்மால் முடிவதில்லை; ஆனால், நாம் பிறரைத் திட்டுகிறோம். இவ்விதம், தற்போதைய அரசியல் அமைப்பில் உண்மை பலியிடப்படுகிறது.

அதேபோல், எந்தத் தொழிலையும், வியாபாரத்தையும் நடத்த மக்களுக்கு அடிப்படை உரிமை அளிக்கப்பட்டுள்ளது; ஆனால், நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டு, இலட்சக்கணக்கான மக்கள் உணவு இன்றி வாடும் போது அவர்களுக்கு வழங்கப்படும் உணவுக்கு அதிக விலை கொடுக்கவேண்டும் என்று சட்டத்தைச் சுட்டிக்காட்டி வாதாடினால், சமுதாயத்திடமிருந்து குழப்பத்தைத் தவிர வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது!

நாட்டு மக்களுக்கு உணவு வழங்குவதில் அரசு கவனம் செலுத்துமே தவிர, ஏதோ சில தனி மனிதர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தாது.

'சொத்துக்களைப் பெறுவதற்கான அடிப்படை உரிமை எவ்விதத்திலும் பாதிக்கப்படக் கூடாது' என்று சிலர் வாதாடுகிறார்கள்; ஆனால், சமுதாயத்தின் பொது நலனுக்கு பொருந்தாதபடி தமது சொத்துக்களை பயன்படுத்த அவருக்கு உரிமை இல்லை.

ஆகவே, பேச்சுரிமை---தொழில் நடத்தும் உரிமை -- சொத்துக்களை உடைமையாக்கிக் கொள்ளும் உரிமை -- ஆகியவை, தனிப்பட்ட முறையில் மக்களுக்கு மட்டும் பயன் அளிக்கும் உரிமையல்ல; சமுதாயத்திற்கும் அளிக்கப்பட்ட உரிமையாகும்.

மக்கள் அடங்கியுள்ள அமைப்புதான் சமுதாயம்; ஆகவே, மக்களோ அல்லது சமுதாயமோ தனித்து இயங்க முடியாது!

மக்களின் நலன்களிடையே மோதல்கள் ஏற்படலாம். விருப்பப்படி தொழிலை ஆரம்பிக்கவோ அல்லது மூடவோ, ஆட்களை வேலையில் அமர்த்திக்கொள்ளவோ, அல்லது நீக்கவோ பணக்காரர்களுக்கு சட்ட நுணுக்க விளக்கங்கள் வாய்ப்பு அளிக்கக்கூடும்.

அப்படி அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவதால் அவர்களுக்கு ஏற்படக்கூடிய துன்பங்கள் பற்றிக் கவனிக்காமல் இருக்கலாம்; ஆனால், 'அடிப்படை உரிமை' என்பதன் பெயரில் இவ்வித நிலைமை சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்டால், பழங்காலத்தில் இருந்தது போன்ற குழப்பமான நிலைமை மீண்டும் தோன்றும்.

அடிப்படை உரிமையானது எந்த அளவுக் மக்களின் உரிமையோ அதே அளவுக்கு அரசு சம்பந்தப்பட்ட உரிமையுமாகும்; இதை நீதிபதிகள் உணர்ந்து பணியாற்றினால், சமூக நீதியை நோக்கி நாம் முன்னேற முடியும்."

'மூன்றும் உலகப் போர் மூளாமல் தடுத்தது'

'பசி -- பிணி -- பயம் நீங்கப் பல வழிகளில் பாடுபடுகிறது'

ஐ. நா. மன்றத்தின் சாதனைகள் பற்றி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை, அக். 25 —

"இரண்டு உலகப் போர்களில் பிணமலைகள் குவிந்ததைக் கண்ட பல நாடுகள், போர்களைத் தவிர்க்க ஐ. நா. அவையைத் தோற்றுவித்தன!

"ஐ. நா. மன்றம் எல்லாப் பிரச்சினைகளிலும் தீர்வு காணவிட்டாலும், சில பிரச்சினைகளில் தீர்வு கண்டுள்ளது; அதன் காரணமாக மூன்ருவது உலகப்போர் தவிர்க்கப்பட்டிருக்கிறது.

"இரண்டு நாடுகளுக்கு இடையே ஏற்படும் பகை, உலகம் முழுவதும் பரவாமல் ஐ. நா. மன்றம் தடுத்து நிறுத்தியுள்ளது. ஒரு குடிசையில் பற்றிய தீ, மற்ற குடிசைகளில் பரவாமல் தடுப்பது மிகச் சிரமமான காரியமாகும்.

"உலக மக்கள் தொல்லையற்ற வாழ்வு வாழ—பசி நீங்க வேண்டும்; பிணி நீங்க வேண்டும்; பயம் நீங்கவேண்டும்; பசியையும், பிணியையும், பயத்தையும் போக்க ஐ நா. மன்றம் பல வழிகளில் பாடுபட்டுவருகிறது"

என்று, கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், ஐ. நா. மன்ற நாள் விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஐ நா. மன்றம் தொடங்கி 23 ஆண்டுகள் ஆனதையொட்டி, 'ஐ. நா. மன்ற நாள்' நேற்று சென்னையில் கொண்டாடப்பட்டது.

விழாவுக்கு வந்திருந்தவர்களைத் தமிழக அரசின் செய்தி-விளம்பரத் துறை இயக்குநர் டி. வி. வாசுதேவன் வரவேற்றுப் பேசினர்.

தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங், விழ விற்குத் தலைமைதாங்கிப் பேசியதாவது:—

"மக்கள் இனத்தைக் காப்பாற்ற ஐ. நா. மன்றத்தைப் பலப்படுத்த வேண்டும்.

"உலகத்தில் உள்ள மக்கட் தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர் வறுமையில் வாடுகின்றனர்; அதே நேரத்தில், மூன்றில் ஒரு பகுதியினர் எல்லா வசதிகளையும் அனுபவிக்கின்றனர்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், அமைதியை எப்போதும் எதிர்பார்க்க முடியாது! ஆகவே, நிலையான அமைதி ஏற்பட பொருளாதாரத் துறையில் வளர்ச்சி அடைய வேண்டும்."

இலங்கைத் தூதர் சேனவிரத்னே, மேற்குஜெர்மனி துணைத் தூதர் கார்ல்பாட்டர், இரஷ்யத் துணைத் தூதர் பிரோலிவ் ஆகியோரும் பேசினர்.

அமைச்சர் சத்தியவாணிமுத்து நன்றி கூறினர்.

விழாவையொட்டி கலைநிகழ்ச்சிகளும நடைபெற்றன.

மனிதர் அஞ்சும் பயங்கர நோய்

காக்கை வலிப்புக்குக் காரணம் என்ன?

உரிய சிகிச்சை அளித்தால் உடல் வலிமை பெறலாம்

மனிதர்கள் அஞ்சும் பயங்கர நோய்களில், காக்கை வலிப்பு ஒன்ருகும்.

எந்த நேரத்தில் -- எந்தச் சந்தர்ப்பத்தில் காக்கை வலிப்பு நோய் தாக்கக்கூடும் என்று தெரியாது; காக்கைக்கும் -- இந்நோய்க்கும் என்ன சம்பந்தமோ -- யாருக்கும் தெரியாது; ஆனல் வலிப்பு நோய் கண்டவர்கள், அந்தக் குறுகிய நேரத்தில் படும் துன்பம் சொல்லத் தரமன்று!

பெரியவர்களுக்கும், சிறியவர்களுக்கும் காக்கை வலிப்பு வருவதுண்டு. காக்கை வலிப்பு காணும் குழந்தைகளுக்கு உரிய காலத்தில் நல்ல சிகிச்சை அளித்தால் உடல் வலிமைமிக்க மனிதனாக வளர இயலும்.

மத்திய நரம்பு மண்டலக் கோளாறு காரணமாகத்தான் வலிப்பு நோய் ஏற்படுகிறது. பலன் அளிக்கும் மருந்தை சில ஆண்டுகளுக்குத் தொடர்ந்து பயன்படுத்தி வந்தால் குணமடைய வாய்ப்பு உண்டு.

வலிப்பு நோயில் பல்வேறுவித ரகங்கள் உண்டு; இந்த ரகங்களை வேறுபடுத்த இன்னும் தீவிர ஆராய்ச்சி தேவை.

குழந்தைப் பருவத்திலும், பின்னர் வயதான பின்னரும் வலிப்பு ஏற்படுவதுண்டு; இவற்றில் மாறுபாடு உண்டு.

வலிப்பு நோய் பரம்பரையாக வருவதுண்டு. கடும் நோய் அல்லது மூளைக் காயம் காரணமாகவும் வலிப்பு வருவதுண்டு. ஒவ்வொரு வித வலிப்புக்கும் ஒவ்வொரு காரணம் இருப்பதால், அதனை ஆராய்ந்து-- அதற்குரிய வகையில் சிகிச்சை அளிக்கச் செய்ய வேண்டும்.

சிறு வயதில் வலிப்பு நோய் கண்டால், உடனடியாக தக்க சிகிச்சை அளித்தால் பிற்காலத்தில் பயங்கர வடிவம் எடுக்காமல் தவிர்க்கலாம்.

பீட்ரூட்டிலிருந்து சர்க்கரை!

சர்க்கரைத் தயாரிப்புக்கு முழுக்க முழுக்க கரும்பையே நம்பியிருப்பது இப்போது பெரும்பாலும் பழக்கமாக இருக்கிறது. ஆனல், கரும்பு ஒரு நன்செய்ப் பயிராக இருப்பதால் இது எல்லா இடங்களிலும் பயிராகாது.

ஆனல் எல்லா இடங்களிலும் சர்க்கரையின் தேவை இருப்பதால், பிரிட்டனில் பீட்ரூட் பயிரில் இப்போது அதிக அக்கறை காட்டப்படுகிறது.

கிழக்கு ஆங்கிலியா, லிங்கன்ஷயர் முதலிய இடங்களில் இந்தப் பயிர் தீவிரப்படுத்தப்பட்டு, பீட்ரூட் கிழங்கிலிருந்து சர்க்கரை தயாரிக்கும் சர்க்கரை ஆலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒரு நாட்டின் சர்க்கரைத் தேவை அனைத்தையும் பீட்ரூட் நிறைவு செய்யாவிடினும் இறக்குமதியை ஓரளவு குறைக்கும் என்ற நோக்கத்தில் இந்த முறை ஊக்குவிக்கப்படுகிறது.

எடமேலையூர் நாவலர் மன்றம்

18—10—68-ல், மன்னை வட்டம் எடமேலையூரில் நாவலர் மன்றம் திரு. சி. இராமையன் தலைமையில் துவக்கப்பட்டது. வட்டச் செயலாளர் கே. எம். செழியன், தோழர் சு. நாராயணசாமி ஆகியோர் அறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சியின் சிறப்புப்பற்றிப் பேசினர்.

எஃகுக் காகிதம்!

மரப் பட்டைகளையும், வைக்கோலையும் காகிதமாக்குவது பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம்; ஆனல் வேறெங்கும் நடைபெருத விசித்திரமாக ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் எஃகினாலேயே காகிதம் தயாரித்திருக்கிருர்கள்!

மேற்கு ஜெர்மனியில் டஸ்ஸல்டார்ப் என்ற நகரில் உள்ள ஒரு நிறுவனம் இந்த எஃகுக் காகிதத்தைத் தயாரித்திருக்கிறது.

சாமான்களைப் பொட்டலம் கட்ட இந்த எஃகுக் காகிதம் பயன்படுத்தப்படும்!

கிழியாமலும், வெளிப்புற தட்ப வெப்ப நிலைகளால் சேதமடையாமலும், காற்றைப் புகவிடாமலும் சாமான்களைப் பாதுகாக்க எஃகுக் காகிதத்தைவிடப் பொருத்தமானது எதுவும் இருக்காது அல்லவா?

சிசர்ஸ் போட்டியில் சேருங்கள் —

முகச்சாயலை பார்த்து நட்சத்திரங்களின் பெயர்களைக் கூறும்

பெறுவீர்

ரூ. 30,000

முதல் பரிசு ரூ. 19,000
2வது பரிசு ரூ. 8,000
3வது பரிசு ரூ. 3,000

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான்:

நீங்கள் பார்க்கும் 10 முகச்சாயல்களும் பிரபல இந்திய திரைப்பட நட்சத்திரங்களினுடையவை. "இதை விடை அனுப்பும் பாரமாக உபயோகிக்கவும்" என்று குறிப்பிடப்பட்டுள்ள கட்டத்தில் 1-ம் நம்பருக்கு எதிராக 1 என்று குறிப்பிடப்பட்டுள்ள முகச் சாயலைக் கொண்ட நட்சத்திரத்தின் பெயரை எழுதுங்கள். (உதாரணம்: முகச்சாயல் 1 'விமி'யினுடையது என்று நீங்கள் நினைத்தால் கட்டத்தில் 1-ம் நம்பருக்கு எதிராக 'விமி' என்று எழுதுங்கள்.) இவ்விதமாகவே 1 முதல் 10 வரை எல்லா காலி இடங்களையும் பூர்த்தி செய்யுங்கள். பிறகு கோரப்படும் இதர விவரங்களையும் பூர்த்தி செய்து, 5 (ஐந்து) காலி சிசர்ஸ் சிகரெட் பாக்கெட்டுகளையும் சேர்த்து முற்றிலும் பூர்த்தி செய்யப்பட்ட விடை பாரத்தை கொடுக்கப்பட்டுள்ள முகவரிகளில் ஏதாவதொன்றுக்கு அனுப்புங்கள். 40 திரைப்பட நட்சத்திரங்களின் பெயர் பட்டியலை நாங்கள் கொடுத்துள்ளோம். இங்கு கொடுக்கப்பட்டுள்ள முகச்சாயல்கள் இந்தப் பட்டியலிலுள்ள 10 திரைப்பட நட்சத்திரங்களினுடையவை.

திரைப்பட நட்சத்திரங்களின் பெயர்கள்:

சுஜித் குமார், தேவ் ஆனந்த், அச்லா சச்தேவ், ஆகா, சஞ்ஜய், ஆஷா பரேக், நிருபராய், மீனு குமாரி, சஷிகலா, ஷார்மிளா டாகுர், மதுமதி, பிரேம் சோப்ரா, அஸ்ரா, பர்யால், சாயிதா கான், பிஸ்வஜித், ஜெய்சங்கர், ஹர்நாத், பி.காஞ்சனா, வஹிதா ரஹ்மான், மாலா சின்ஹா, அஞ்சு மகேந்திரு, சஷிகபூர், சைரா பானு, பிரோஸ் கான், இந்திராணி முக்கர்ஜி, சிமி, காமினி கௌசல், விமி, நாஜ், பபிதா, மும்தாஜ, ஸோனியா சாஹ்னி, ஜெப் ரஹ்மான், பிரான், எம். ராஜஸ்ரீ, கே. விஜய நிர்மலா, கிருஷ்ணா, ஏ.வி.எம் ராஜன், வாணிஸ்ரீ.

முக்கிய விதிகள்: இப்போட்டியில் கலந்து கொள்ளும் ஒருவர் எத்தனை விடைகள் அனுப்பியிருந்தாலும் எந்தச் சூழ்நிலையிலும் அவர் ஒரு பரிசுக்குமேல் பெறுவதற்கு தகுதியுடையவராகார். சரியான விடை பத்திரிகைகளில் வெளியிடப்படும். இந்தப் போட்டியில் இந்தியாவில் வசிக்கும் 18 வயதுக்கு மேற்பட்ட இந்தியப் பிரஜைகள் மட்டுமே கலந்து கொள்ளலாம்.

சிகரெட் கடைகளில் கிடைக்கும் விடை அனுப்பும் பாரங்களில் முழு விதி, நிபந்தனைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.



முடிவு தேதி நவம்பர் 15, 1968 வரை நீடிக்கப் பட்டு உள்ளது.

சிசர்ஸ் சிகரெட்டுகள் தயாரிப்பவர்களால் நடத்தப் படுகிறது.

- - - இங்கே கத்தரிக்கவும் - - -

இதை விடை அனுப்புவதற்கான பாரமாக பயன்படுத்தவும்
(இங்கு பெயர்களைப் பூர்த்தி செய்யவும்)

1.	6.
2.	7.
3.	8.
4.	9.
5.	10.

விடை அனுப்பும் பாரங்களில் 'சிசர்ஸ் போட்டி' என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். அவற்றை இம்பீரியல் டுபாக்கோ கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்டின் அலுவலகங்கள் ஏதேனும் ஒன்றுக்கு தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கலாம்.

தபால் பை எண் 5029 மதராஸ்-1 தபால் பெட்டி எண் 12, விசாகப்பட்டினம் 1. தபால் பெட்டி எண் 1620 கோயமுத்தூர்-18.

தயவு செய்து பெரிய எழுத்துக்களில் எழுதவும்

பெயர் ....

முகவரி ....

....

....

வயது .... தொழில் ....

நாளை 12,49,759 பேர் வாக்குப்பதிவுசெய்வர்

120 இடங்களுக்கு 395 பேர்போட்டி

ஒவ்வொரு தொகுதியிலும் வாக்குகளை எண்ணுவதற்குத் தனி ஏற்பாடு

சென்னை, அக் 26—
நாளை நடைபெறும் மாநகராட்சித் தேர்தலில், 12,49,759 வாக்காளர்கள், 120 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு வாக்குப் பதிவு செய்வர்; வாக்குப் பதிவுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் முடிந்துவிட்டன.

1964-ல் நடைபெற்ற தேர்தலை விட இத்தேர்தலில் 1,20,000 வாக்காளர்கள் அதிகம்.

சென்னை நகரில் முன்பு 100-வட்டங்களே இருந்தன; இப்போது நகரின் சட்டமன்றத் தொகுதிகள், 10-லிருந்து 12-ஆக உயர்த்தப்பட்டதன் விளைவாக, வட்டங்களின் எண்ணிக்கையும் 120 ஆக உயர்ந்திருக்கிறது.

120 வட்டங்களிலுமாக மொத்தம் 395 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

34 வட்டங்களில் நேரடிப் போட்டியும்; 40 வட்டங்களில் மூவர் போட்டியும்; 32 வட்டங்களில் நால்வர் போட்டியும்; 10 வட்டங்களில் ஐவர் போட்டியும்; 2 வட்டங்களில் அறுவர் போட்டியும் நிலவுகிறது.

இரண்டு வட்டங்களில் ஒன்றில் எட்டுப் பேரும், மற்றொன்றில் ஒன்பது பேரும் போட்டியிடுகின்றனர்.

இந்தத் தேர்தலுக்காக மொத்தம் 1,336 வாக்குச் சாவடிகள் ஏற்படுத்தப்படுகின்றன; முன்னையத் தேர்தலில் 1,018 வாக்குச் சாவடிகள் மட்டுமே இருந்தன.

சைதையில்தான் வாக்குச் சாவடிகள் அதிகம்; அங்கு 144 வாக்குச் சாவடிகள் உள்ளன; பூங்கா நகரில்தான் மிகக் குறைவு -- 88 வாக்குச் சாவடிகள் மட்டுமே உள்ளன.

ஞாயிறன்று காலை 8 மணிக்கு வாக்குப் பதிவு தொடங்கும்; வாக்குப் பதிவு ஏற்பாடுகளை 6,000 அதிகாரிகள் கவனிப்பர்.

திங்கட்கிழமை காலை 8 மணிக்கு வாக்குகளின் எண்ணிக்கை துவங்கும்; வாக்குகளை எண்ணும் பணியில் 600 அதிகாரிகள் ஈடுபடுவர்.

முடிவுகள் அவ்வப்போது தேர்தல் அதிகாரிகளால் அறிவிக்கப்படும்; மாலை 3 மணிக்குள் எல்லா முடிவுகளும் அறிவிக்கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வாக்குகள் எண்ணப்படும் இடங்கள்

வண்ணைத் தொகுதி (1 முதல் 10 வட்டங்கள் வரை):—தியாகராயர் கல்லூரி.

துறைமுகத் தொகுதி (11 முதல் 20 வட்டங்கள் வரை):—கலெக்டர் அலுவலகத்திலுள்ள தாலுகா அலுவலகத்தில்.

பேசின்பிரிட்ஜ் தொகுதி (21முதல் 30 வட்டங்கள் வரை):— அம்மன்கோயில் தெருவிலுள்ள டி.டி.வி. உயர்நிலைப் பள்ளியில்.

பூங்கா நகர்த் தொகுதி (31முதல் 40 வட்டங்கள் வரை):—நேரு விளையாட்டு அரங்கம்.

பெரம்பூர்த் தொகுதி (41 முதல் 50 வட்டங்கள் வரை):—இராவ் பகதூர் கலவலகண்ணன்செட்டி (ஆர். பி. சி.) உயர்நிலைப் பள்ளி.

புரசைத் தொகுதி (51 முதல் 60 வட்டங்கள் வரை):—செயின்ட் ஊர்து பெண்கள் உயர்நிலைப் பள்ளி.

எழும்பூர்த் தொகுதி (61 முதல் 70 வட்டங்கள் வரை):—பச்சையப்பன் கல்லூரி.

ஆயிரம்விளக்குத் தொகுதி (71 முதல் 80 வட்டங்கள் வரை):—இராயப்பேட்டை வெஸ்லி உயர்நிலைப் பள்ளி.

திருவல்லிக்கேணித் தொகுதி (81 முதல் 90 வட்டங்கள் வரை):— சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளி.

மயிலாப்பூர்த் தொகுதி (91முதல் 100 வட்டங்கள் வரை):—பி. எஸ். உயர்நிலைப் பள்ளி.

தியாகராயநகர்த் தொகுதி (101 முதல் 110 வட்டங்கள் வரை):—நுங்கம்பாக்கம் மாநகராட்சி மகளிர் உயர்நிலைப் பள்ளி.

சைதாப்பேட்டைத் தொகுதி (111 முதல் 120 வட்டங்கள் வரை):—சைதாப்பேட்டைஆசிரியர் பயிற்சிக் கல்லூரி.

மாநகரின் மாட்சி ஓங்கிட உதயசூரியனுக்கு வாக்களிப்பீர்!

எங்கள் கடமை முடிந்தது

உங்கள் கடமையை ஆற்றிடுவீர்

பொதுமக்கள் --- கழகத் தோழர்களுக்கு இரா. நெடுஞ்செழியன் வேண்டுகோள்

சென்னை, அக். 25—
"பத்து ஆண்டுக்காலம் விளக்கங்கள் கேட்டுக் கேட்டு --- புரிந்து புரிந்து --- வெற்றியைத் தந்து தந்து அனுபவப்பட்டவர்கள் நீங்கள்! 1962-ல் நடந்த பொதுத்தேர்தலிலும், 1964-ல் நடந்த மாநகராடசித் தேர்தலிலும், 1967-ல் நடந்த பொதுத்தேர்தலிலும் மகத்தான வெற்றி தேடித்தந்தவர்கள் நீங்கள்!

"அதற்குப் பிறகு நடந்த நாடாளுமன்ற இடைத் தேர்தலிலும் நல்லாதரவு நல்கி --- வெற்றி தேடித்தந்து --- 'கழகத்தின் பக்கமே இருக்கிறோம்; கழகத்தின் கொள்கை, கோட்பாடுகளின் பக்கமே இருக்கிறோம்' என்பதைக் காட்டினீர்கள்!

"அதன் பின்னர்தான், 1968-ல் நடைபெறும் மாநகராட்சித் தேர்தலுக்கு நிற்கிறோம்! வெற்றி தேடித்தரும் பொறுப்பு உங்களுடையது! அந்த வகையில் உங்கள் பொறுப்பை நினைவுபடுத்தத்தான் வட்டங்கள்தோறும் வருகிறோமே தவிர, விளக்கங்கள் கூறுவதற்கு அல்ல! விளக்கங்கள் பல கூறி -- பல கட்டங்களையெல்லாம் தாண்டி வந்திருக்கிறோம்!

"'அண்ணாவுக்கு அரசியல் தெரியாது; அரசியல் அரிச்சுவடியில், 'ஆனா -- ஆவன்னா' தெரியாது; காமராசருக்குத்தான் 'ஏனா -- ஏயன்னாவரை தெரியும்' என்று காங்கிரசார் கூறிய பின்னர்தான் நாம் பதவிக்கு வந்தோம்!

"காமராசர் பேச்சையும், அண்ணா பேச்சையும், பக்தவத்சலம், சுப்பிரமணியம் போன்றவர்கள் பேச்சையும், கழகத் தோழர்களின் பேச்சையும் சீர்தூக்கிப் பார்த்த பிறகுதான், நல்ல தீர்ப்பளித்திருக்கிறீர்கள்!

"இன்று இரவு 12 மணியுடன் என்னைப் போன்ற பேச்சாளர்களெல்லாம் உட்கார்ந்துவிடுவோம்! நீங்கள்தான் நாளை ஓடியாடி வேலை செய்யவேண்டும்! உங்களை நம்பித்தான் கூட்டணி வேட்பாளர்கள் நிற்கிறார்கள்; நம்பியவர்களைக் கைதூக்கிவிடுவது உங்கள் கடமை!

"கழகத்தின் வலிவையும், துணைக்கு வருகின்ற கூட்டணிக் கட்சிகளின் வலிவையும், காங்கிரசின் வலிவையும் அறிந்துதான் இத்தேர்தல் களத்தில் இறங்கியிருக்கிறோம்!

"'கொள்கையிலே ஒன்றுபடாத கூட்டணி எப்படி வெல்லும்' என்று காமராசர் பேசியிருக்கிறார்! கொள்கை அடிப்படையில் வேறுபாடு உடையவர்கள்தான்; அவரவர்கள் கொடி—அவரவர்கள் கோட்பாடு அவரவர் இடத்திலேயே இருக்கிறது என்றாலும், தேர்தல் உடன்பாடு கொண்டிருக்கிறோம்; அதனால்தான், கொள்கையளவில் ஒன்றுபடாத நாம், கடந்த பொதுத் தேர்தலிலே வெற்றி பெற்றோம்.

"கொள்கைக்காக உழைத்தவர்களை ஒதுக்கிவிட்டு --- கொள்கை வலிவுடையோரை வெளியேற்றிவிட்டு --- பண வலிவு படைத்தவர்கள், பட்டக்காரர்கள், பாளையக்காரர்கள், இராஜாக்கள் வலிவு ஏற்படுத்திக் கொண்டதால்தான் --- காந்தியார் கருத்தைக் குப்பையிலே தள்ளிவிட்டு ஆணவத்தோடு இருந்ததால்தான் -- கொள்கை வேறுபாடு கொண்ட கூட்டணிக் கட்சிகளிடம் காங்கிரசுக் கட்சி தோற்றது!

"சென்னை மாநகரில் 1959 நகராட்சித் தேர்தலுக்குப் பிறகு காங்கிரசின் கையிலிருந்த வட்டங்களையெல்லாம் பறித்துப் பறித்துக் கழகத்தின் கையில் கொடுத்தீர்கள்! போட்டியில்லாமலே மேயரைத் தேர்ந்தெடுக்கும் அளவுக்குக் கழகத்தை உயர்த்தினீர்கள்! 1967 பொதுத் தேர்தலில், காங்கிரசின் இடத்தில் எங்களை வைத்து -- நாங்கள் இருந்த இடத்தில் காங்கிரசை இருக்க வைத்தீர்கள்!

"இத்தகைய சிறப்பு வாய்ந்த நிலையில், நாம் இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறோம்! 1964-ல் இருந்த வலிவுகூட இப்பொழுது காங்கிரசுக்கு இல்லை! அகில இந்தியத் தலைவராகக் காமராசர் இருந்த காலத்திலேயே காங்கிரசால் வெல்ல முடியவில்லை என்றால், காமராசர் புகழ் இறங்கு நிலையில் இருக்கின்ற இந்த நேரத்திலா அவர்கள் வென்றுவிடப் போகிறார்கள்!"

—(தேர்தல் பிரசாரக் கூட்டங்களில்)

காங்கிரசு 'கோவிந்தா'!

சென்னை, அக். 26—
"காங்கிரசாருக்கு எப்படியாகிலும் ஓட்டுகளைப் பிரித்துவிட வேண்டுமென்று ஆசை ஏற்பட்டுவிட்டது; எனவே, காலம் போன காலத்தில் காமராசரை விட்டு 'பாத யாத்திரை' கிளம்பியுள்ளனர்! ஆனால், இந்தப் 'பாத யாத்திரை'யில் காங்கிரசுக்கு ஏதும் கிடைக்கப்போவதில்லை!

"'தோல்வி நிச்சயம்' என்றாலும், அவர்கள் சும்மா இருக்கப் போவதில்லை! மீண்டும் அடுத்த தேர்தலில் ஓட்டு வேட்டைக்காக அவர்கள், தெருவில் படுத்துப் புரண்டு உருண்டு கொண்டே 'கோவிந்தா' எனக் கூவிக் கொண்டே யாத்திரை வந்தாலும் வருவார்கள்! அந்த அளவுக்கு அவர்களுக்குப் பதவி ஆசை!

"'கோவிந்தா' போட்டு வந்து ஓட்டுக் கேட்டாலும், மக்கள் அவர்கட்குப் போடவேண்டியதைத்தான் (நாமம்) போடுவார்களே தவிர, ஓட்டுப் போடமாட்டார்கள்!"

என்று தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையில், புதுவை மாவட்ட தி. மு. க. செயலாளர் எம். ஏ. சண்முகம் கூறினார்.

அகவிலைப் படி மேலும் உயர்வு

டில்லி அரசு அறிவிப்பு

புதுடில்லி, அக். 26—
செப்டப்பர் முதல் தேதியிலிருந்து மத்திய அரசு ஊழியர்களுக்கு, மேற்கொண்டும் விலைவாசி உயர்வுப் படி அதிகரிக்கிறது.

ரூ. 500-க்குக்கீழ் ஊழியம் பெறும் ஊழியர்களுக்கு இந்த அதிகப்படி உயர்வு கிடைக்கும்; இதற்காக அரசுக்கு ஆண்டுதோறும் ரூ. 30 கோடி அதிகமாகச் செலவாகும்.

விலைக் குறியீட்டு எண், ஓராண்டில் 205 புள்ளியிலிருந்து 215 புள்ளிகளாக உயர்ந்ததையடுத்த விலைவாசி உயர்வுப் படியை மேற்கொண்டும் உயர்த்துவதென மத்திய அமைச்சரவை முடிவு செய்தது.

ரூ. 500-க்குக் குறைவான பல்வேறுவிதமான ஊதியங்களுக்குத் திங்கள்தோறும் விலைவாசி உயர்வுப் படியை ரூ. 6-முதல் ரூ. 11 வரையில் உயர்த்தப்படும்.

15 நாட்களில் 5,600பேர்கைது

பஞ்சாபில் சட்டம்-- ஒழுங்கு படும்பாடு

சண்டிகார், அக். 26—
கடந்த 15 நாட்களில் குற்றமிழைத்தவர்களைப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டதன் விளைவாகப் பஞ்சாபில் ஏறத்தாழ 5,600 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காவல்துறையினர் 4,600 பேர்களுக்குமேல் கைது செய்து அவர்களில் 3,303 பேர்கள்மீது வழக்குத் தொடர்ந்துள்ளனர்,

மேற்சொன்னவர்களைத் தவிர, 'நடத்தை கெட்டவர்கள்' என்ற குற்றச்சாட்டின்கீழ் 1,566 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தகுதியைப் பெற....!

"ஏராளமான உரைகள் நிகழ்த்துவதால் நாம் சுய ஆட்சிக்குத் தகுதி உடையவர்களாக முடியாது; நமது நடத்தையினால்தான் அந்தத் தகுதியைப் பெற வேண்டும்."

—காந்தியார்

சனநாயகம் காக்க உங்கள் வாக்கு!

சென்னை, அக். 26—
"சென்னை மாநகராட்சித் தேர்தலில் தி. மு. கழகத்திற்கும் -- கூட்டணிக் கட்சிகளுக்கும் அளிக்கும் வாக்கு, சனநாயகப் பண்புக்கு அளிக்கும் வாக்குகளாகும்!

"இந்தத் தேர்தலில் நாம் பெறும் வெற்றிதான், மற்ற மாநிலங்களில் பெறவிருக்கும் வெற்றிகளுக்கு முன்னோடியாகும்!

"புதுவை மாநிலத்தில் டிசம்பர் திங்களில் நகராட்சித் தேர்தல் நடைபெறவிருக்கிறது. கழகக் கூட்டணி தேர்தலில் போட்டியிட்டால், 'வெற்றி நிச்சயம்' என்கிற அளவுக்கு நல்ல சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

"எந்த சனநாயகத்தைக் கட்டிக் காக்கப் போகிறோம் என்று காங்கிரசுக் கட்சி கூளுரைத்ததோ, அதே சனநாயகத்தை அழிக்கும் காரியத்தில் இப்போது, அது ஈடுபட்டிருக்கிறது!

"தி. மு. கழகமும் -- கூட்டணிக் கட்சிகளும் இன்று சனநாயக இயக்க அணியாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றன! இந்தக் கூட்டணிக்கு அளிக்கும் வாக்கு, சனநாயகப் பண்புக்கு அளிக்கின்ற வாக்காகும்!"

--புதுவை முன்னாள் முதலமைச்சர்
பரூக் மரைக்காயர்

நெடுஞ்செழியன் பயணம் ரத்து

சென்னை, அக். 26—
கல்வி -- தொழில் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், அக். 28-ம் நாளன்று சென்னையிலிருந்து புறப்பட்டுப் பாரிசுக்குச் சென்று அங்கிருந்து அமெரிக்காவுக்குச் செல்லத் திட்டமிட்டிருந்தார்.

ஆனால், வேலை மிகுதியின் காரணமாக அவர் தம்முடைய வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தை ரத்து செய்துவிட்டார்.

நடக்க இருப்பவை

27--10--68

அருப்புக்கோட்டை

14-வது வட்ட தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு பாண்டியன் திடலில்; தலைவர்: சிவ. சண்முகசுந்தரனார்; பேசுவோர்; சி. தமிழரசி, ப. பெ. ந. நல்லதம்பி, ஆ. குருசாமி, க. மீ. மீ. பாலசுந்தரம்.

28--10--68

தேங்காயத் திட்டு (புதுவை)

தி. மு. க. சார்பில், மாலை 7 மணிக்கு, மாரியம்மன்கோயில் திடலில்; தலைவர்: சீ. வேதநாயகம், பேசுவோர்: வெ. கண்ணன், எம். ஏ. சண்முகம், சு. ம. சுப்பராயன், கு. முருகையன், மற்றும் பலர்.

29--10--68

கோபி

தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு 1-வது வார்டு குடிநீர்க் கிணற்றுத் திடலில்; பேசுவோர்: க. அன்பரசு, எஸ். எம். பழனியப்பன், கே. எஸ். ஆனந்தன், வி. வி. வெங்கடாசலம், ஜி. பி. வெங்கிடு எம். சி., பி. கே. பழனியப்பன், மற்றும் பலர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியீட்டாளராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] ரோட்டு, சென்னை-13) அச்சேற்றி வெளியிடப்படுகிறது.